ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2384/27 - 2024 මැයි මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.05.16

*2384/27 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*25அ மற்றும் 70இ என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 101137 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் இங்கிரிய வீதி, மீபே, பாதுக்கவில் அமைந்துள்ளதும் மற்றும் சொல்லப்பட்ட எஸ் எல் ரி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, 2024, மாச்சு 20 ஆந் திகதியிலிருந்து கம்பெனிகளின் பதிவாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட சான்றிதழின் கீழ் "ஸ்ரீலங்கா டெக்னொலொஜி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" ஆக கூட்டிணைக்கப்படுகின்றதுமான எஸ் எல் ரி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதிய 1995/ 39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையில் "எஸ் எல் ரி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் சொற்கள் எனும் சொற்கள் சொல்லப்பட்ட கட்டளையில் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அவற்றுக்குப் பதிலாக "ஸ்ரீலங்கா டெக்னொலொஜி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் சொற்களை இடுவதன் மூலமும் ஏதேனும் கட்டளை, அறிவித்தல், உடன்படிக்கை, தொடர்பாடல் அல்லது மேற்கூறப்பட்ட பிரிவுகளின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட ஏனைய ஆவணங்களில் "எஸ் எல் ரி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" க்கான ஒவ்வொரு குறிப்பீடுகளும் "ஸ்ரீலங்கா டெக்னொலொஜி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" க்கான குறிப்பீடொன்றாக வாசிக்கப்படுதல் மற்றும் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டுமெனவும் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-*

மேலும், 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதிய 1995/ 39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையினால் எஸ் எல் ரி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் மேல் வழங்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தினைப் பின்பற்றி இக்கட்டளை நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னர் சொல்லப்பட்ட எஸ் எல் ரி கெம்பஸ்

1A - PG 6728 — 284 (2024/05)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(பிறைவேட்) லிமிட்டெட்டினால் பிரயோகிக்கப்படும் ஏதேனும் தத்துவம் அல்லது புரியப்படும் ஏதேனும் கடமை அல்லது பணியானது, எல்லா நோக்கங்களுக்காகவும் ஸ்ரீலங்கா டெக்னொலொஜி கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் வலிதானதாக பிரயோகிக்கப்பட்டதாகவும் புரியப்பட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2024*, மே *14*.

EOG *05-0122*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.